


30.06.2025

## 26. அக்கினியில் என்னை ‘பொன்னாக மாற்றும்’ கர்த்தர்!

**சு**ற்றி நின்ற நண்பர்கள்கூட ‘‘உன் கஷ்ட சூழ்நிலையை பார், தேவன் உன்னை கைவிட்டார்! உன் தேவன் எங்கே?’’ என யோபு மீது சிறிதுகூட கரிசனையில்லாமல் கூறியதைக் கேட்ட, *யோபு* சற்றே தடுமாறினார்! கொஞ்சம் மௌனத்திற்குப் பிறகு, மனம் தெளிந்த *யோபு,* உறுதியான குரலில்: ‘‘சினேகிதன் *எலிப்பாஸ்,* கேள்! இந்த கொடிய சூழ்நிலையில் ‘நான் அவரைப் பார்க்காவிட்டாலும்’ என் இடப்பக்கத்தில் தேவன் கிரியை செய்வதையும், என் வலப்பக்கத்தில் கிரியை செய்வதையும் திட்டமாய் உணர்கிறேன்! அவரது கிரியை முடிந்ததும் ‘‘என் தேவனின் கையில் பொன்னாய் ஜொலிப்பேன்’’ (யோபு 23:8-10) என கூறியதும், சற்று வெட்கத்துடன் *எலிப்பாஸ்* தூர நின்றான்!

ஆம், ‘அக்கினியும்’ எனது நன்மைக்கே என அறிவது ஜெய ஜீவியம்!

**– ரத்னம்**